1973 நவம்பர் 27]

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது சிக்கனமற்ற திட்டங்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதைப்பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

கருவாட்டுப்பாறையில் குட்டை அமைப்புத் திட்டம்.

*427 வினா—**திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், க.குட்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த "கருவாட்டுப்பாறை" பீட்டை சேர்ந்த பள்ளத்தில் "குட்டை" அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. க.குட்டைப் பட்டியில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைய பாண்டு ஸ்கீம் மூலமாகக் குளங்கள் அமைத்திருப்பதன் மூலம் அங்கே ஓரளவு குடிதண்ணீர் கிடைக்கிறது. அதைப்போல மிக வறண்ட பகுதியாகிய வடாற்காடு மாவட்டத்திலும் பாண்டு ஸ்கீமைச் செயல்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டம் குட்டை திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். இன்னமும் அங்கே குடி தண்ணீர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

வேலம்பாளையம் பேரூராட்சி சாலைகள்.

*428 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், 15 வேலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட சாலைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திருப்பூர் தொகுதி பேரவை